பொது நூலகம்
யாழ்ப்பாணம்

# ★ உயர் கல்வி அமைச்சராக அநுரா நியமனம்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 மகார்கழி 1 இதழ் 303
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 16-12-1993

## நாளை பதவியேற்பு

(கொழும்பு)

அநுரா பண்டாரநாயக்க உயர்கல்வி அமைச்சராக பதவியேற்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது நாளை வெள்ளிக்கிழமை ஜனாதிபதி டி. பி விஜயதுங்கா தலைமையில் நடக்கும் வைபவம் ஒன்றிலே இவரது பதவியேற்பு வைபவம் நடைபெறும் என்று சண்டே ஒப்சேவரை மேற்கோள்காட்டி பி. பி. ஸி. தெரிவித்தது.

இந்தப்புதிய பதவி யாரும் எதிர்பார்ப்பதைவிட மிக

(6ம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு 6 கோடி

### தமிழக மக்களும் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆறு கோடி தமிழகமக்கள் ஆதரவாகவுள்ளனர் என அமெரிக்காவிலிருந்து வெளிவரும் 'ஹ்ரோல்ட் ரிபியூன்' என்ற பத்திரிகை தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சிறிலங்காவில் சுதந்திர தேசம் ஒன்றை அமைப்பதற்காக போராடி வருகின்றது. அதற்கு அவலில் தமிழ்

(6-ம் பக்கம் பார்க்க

# ● விடுதலைப் புலிகளின் அடுத்த தாக்குதல் குறித்து படையினர் மத்தியில் குழப்பம்

## தீர்மானம் எடுப்பதில் திணறல்

(யாழ்ப்பாணம்)

பூநகரி தாக்குதலையடுத்து விடுதலைப் புலிகளின் அடுத்த தாக்குதல் இலக்கு எதுவாக இருக்குமென படையினர் பெரும் குழப்பமடைந்துள்ளனர். இதனால் எப்பகுதியை முழுமையான பாதுகாப்பில் வைப்பது என்ற தீர்மானம் எடுப்பதில் படையினர் திணறுகின்றனர்.

ஒருமுறை பலாலியைத் தாக்கலாம் என பலாலியில் பாதுகாப்பு பலப்படுத்தப்படும் அடுத்த தடவை வன்னி எல்லைப்புறத்தை தாக்கலாம் என அதனைப்பலப்படுத்தும் மன்னாரை தாக்கலாம் என அங்கு முகாம்களை வாபஸ் பெற்றதும் கிழக்கைத் தாக்கலாம் என கிழக்கில் சகல முகாம்களை வாபஸ் பெறப் பட்டுவருகின்றன.

இதனால் வடக்கிலிருந்து கிழக்கிற்கும் கிழக்கிலிருந்து வடக்கிற்கும் படைகள் மாறி மாறி மாற்றப்படுகின்றன. (ஸ)

## தாக்குதல்களை சமாளிக்க புதியகாவலரண்கள் அமைப்பு

(கொழும்பு)

பூநகரியில் கைப்பற்றிய ஆயுதங்கள் மூலம் புலிகள் தாக்குதல்கள் நடத்துவார்கள் என்ற அச்சத்தை அடுத்து வடபகுதியிலுள்ள இராணுவ கடற்படை முகாம்களில் புதிய காவலரண்கள் அமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

வடக்கிலுள்ள ஏழு தீவுகளிலும் பலாலி, காங்கேசன்துறை, ஆனையிறவு, மன்னார் தள்ளாடி, முல்லைத்தீவு, வவுனியா போன்ற முகாம்களிலே பல புதிய காவலரண்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

புலிகளின் தாக்குதல்களை சமாளிக்கும் பொருட்டு இம் புதிய காவலரண்களுக்கு பெருமளவு பக்டோவியன்களும் அவசர அவசரமாக தரையிறக்கப்பட்டுவருகின்றனர். இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட படை வீரர்களை கொண்டிருந்த பூநகரி நாகதேவன் துறை ராணுவ, கடற்படை முகாம்களை கடல் மார்க்கமாக

(6-ம் பக்கம் பார்க்க)

## பெருமளவு படையினர் வடபகுதியில் குவிப்பு

(கொழும்பு)

விமானங்கள் மூலம் வடபகுதியில் பெருமளவு விசேட பயிற்சிபெற்ற கொமாண்டோ படையினர் தரையிறக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்தசில நாட்களாக பலாலி விமானத்தளத்திற்கு ஏயர் லங்கா பயணிகள் விமானம் மற்றும் விமானப் படையினரின் விமானங்களும் அதிகளவில் சென்று வருவதை அவதானிக்க கூடியதாக இருக்

(6-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு நிலை பற்றி ஐரோப்பியக் குழு ஆராய்வு

(கொழும்பு)

ஐரோப்பிய சமூகத்தைச் சேர்ந்த தூதுக்குழு ஒன்று ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவைச் சந்தித்து வடக்கு கிழக்கு நிலைமை உட்பட பல்வேறு பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்தது.

மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு கொழும்பு வந்த இக்குழுவினர் நாட்டின்

(6ம் பக்கம் பார்க்க)

## ★ தடுப்புக்காவலில் இருந்தவர்கள் 2 இராணுவத்தை சுட்டுவிட்டு தப்பி ஓடினார்கள்

(திருமலை)

சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இருவர் இராணுவத்தினரைச் சுட்டுவிட்டு தப்பியோடினர்கள்.

கடந்த சனிக்கிழமை திருகோணமலையில் இச்சம்பவம் இடம் பெற்றது, இராணுவ முகாமொன்றில் தடுத்துவைக்

(6ம் பக்கம் பார்க்க)

## வரி அட்டை, இலக்கத் தகடு இல்லாத மோட்டார் ஊர்திகள் மீது சட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பிரதேசத்தில் உள்ள மோட்டார் ஊர்தி உரிமையாளர்கள் அனைவரும் தமது ஊர்தியை போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவின் மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தில் கடந்த சித்திரை 21-ம் திகதி தொடக்கம் ஐப்பசி 30-ம் திகதிக்குட்பட்ட காலப்பகுதிக்குள் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டிருந்தனர்.

ஆகவே சகல மோட்டார்

6ம் பக்கம் பார்க்க)

## கிளாலி — பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறுமென விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அறிவித்துள்ளது.

## புலிகள் இருக்கும் வரை கடமையாற்ற முடியாது

### தப்பியோடிய சிப்பாய் கடிதம்

(மட்டக்களப்பு)

புலிகள் இருக்கும் வரை கடமை செய்ய முடியாதென கடிதம் எழுதி வைத்த இராணுவவீரர் ஒருவர் முகாமிலிருந்து தப்பி ஓடியுள்ளார்.

மட்டக்களப்பு செங்கலடி இராணுவ முகாமிலிருந்த இராணுவ சிப்பாய் ஒருவரே இவ்வாறு தப்பி யோடியவராவார்.

(6-ம் பக்கம் பார்க்க)

## ★ கைதிகள் விடயத்தில் அரசு புலிகளின் நிபந்தனைகளை ஏற்றே ஆகவேண்டும்

(கொழும்பு)

இலங்கை இராணுவ வரலாற்றில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட படையினரைப் பலிகொடுத்த பூநகரி தாக்குதலில் 240 படையினர் புலிகள் வசம் கைதிகளாக பிடித்து வைத்திருப்பதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் வந்துள்ளன எனவே புலிகளின் பிடியிலிருந்து இவர்களை விடுவிக்க வேண்டுமானால் அவர்களின் நிபந்தனையை ஏற்றே ஆகவேண்டும் என்று கொழும்பு பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

ஏற்கனவே புலிகளின் பாதுகாப்பிலுள்ள 34 பொலிஸாரின் விடுதலை தொடர்பாக நடைபெற்ற இழுத்தடிப்பு இராணுவ வீரர்கள் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்துமென

(6ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

அன் பொமேரியன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 44, 3ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
(சி-661)

### மீரா வரப்போரு துள்ளி வரப்போரு!

மீரா வரப்போரு தாமரைச்செல்வி எழுதும் 'தாகம்' புதிய நாவலுடன். அருமையான நாவல் படிக்கத் தவறாதீர்கள். பூபாலசிங்கம், ஸ்ரீசாந்தி, வசந்தம் புத்தகசாலைகள் யாழ்ப்பாணம்.
(சி-659)

### COMPUTER கல்வி

Computer Basic Lotus 1-2-3, C.I.M.A. I.A.B. Shorthand & Typing புதிய பிரிவுகள் 18-12-93 சனிக்கிழமை முதல் ஆரம்பமாகின்றன. உறுதியான கல்வியைப் பெற - School of Business Administration 16, 3rd Cross Street, Jaffna. (C653)

### மணமகள் தேவை

28 வயது உத்தரட்டாதி 4ம் செவ்வாய் கலந்த அழகன். கனடிய அரசாங்கத்தில் வேலை பார்ப்பவருக்கு இசைந்த அழகிய A/L அல்லது பட்டதாரி மணமகள் தேவை. தம்பியும் மைத்துனரும் பொறியியலாளர்கள். இ. கனகசபாபதி, விதானையார் 22, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை.
(சி 645)

### (O.L) MATHS

G. C. E. (O.L)க் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் தவணைப்பரீட்சைகளில் குறைந்த புள்ளிகளைப் பெற்றவர்களுக்கும், 27 வருட அநுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறும்பேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டுக்குளி.
சி-654

### புதிய எழுத்தாளர்களே மகிழ்ச்சியான அறிவிப்பு!

புதிய எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்கு "மீரா பிரசுரம்" ஒரு திட்டத்தை உருவாக்கி செயல்படுத்த இருக்கிறது. முழுவிபரம்: தாமரைச்செல்வி எழுதும் "தாகம்" நாவல் தொண்ணூற்றி ஒன்பதாம் பக்கத்தில்.
(சி-660)

### துளிர்

தமிழ்நாடு, புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ். கிடைக்குமிடம்: வசந்தம் புத்தக நிலையம், புதிய பஸ் நிலையம், 405, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.
(சி-648)

### 5ம் ஆண்டு புலமைப் பரிசில் வகுப்பு

புதிய பிரிவு ஆரம்பம்: 18-12-1993 சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு ஆரம்பமாகின்றன. கணிதம், தமிழ் திரு. கனகசபை ஒய்வு பெற்ற அதிபர். குறிப்பு: கடந்த காலங்களில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுத் தருகின்ற ஓர் நிறுவனம் சித்தன்கேணியில் இதுவே. புதிய அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும். பாரதி கல்வி நிலையம், சித்தன்கேணி.
(சி-658)

POSTGRADUATE DIPLOMA/ DIPLOMA IN ENGLISH LANGUAGE TEACHING 1992/93

The interview for the above corse will be held on 1993-12-17 from 2-00 p.m to 4 00 p.m. in the Board Room of the University of Jaffna. The list of slected candidates for the interview is placed in the University Notice Board. Please collect the interview letter personally at the Academic Branch, University of Jaffna.

REGISTRAR
University of Jaffna

1993-12-14.
(A-3664)

## பொது அறிவுப் போட்டி

(கொழும்புத்துறை)

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் நடத்தும் பொது அறிவுப் போட்டிப் பரீட்சை எதிர்வரும் 28ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சையில் தோற்ற விண்ணப்பித்த மாணவர்கள் தமக்குரிய அனுமதி அட்டைகளைத் தமது கல்லூரிகள், மற்றும் நிறுவனங்களில் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.
-154

## சாவகச்சேரி நகரசபை

# வரவுசெலவுத்திட்டம் - 1994

(255ம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 1979ம் ஆண்டின் 13-ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 178 (3) ம் பிரிவின் பிரகாரம் இச்சபையால் அங்கீகரிக்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்ட 1994ம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டம் இச்சபையில் 16-12-93ம் திகதி தொடக்கம் ஏழு (7) நாட்களுக்கு அலுவலக நேரங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

த. நவரத்தினராசா,
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி, 10-12-93.

(எ-3667)

## யாழ்ப்பாண மாநகரசபை

# கேள்வி அறிவித்தல் - 1994

### சந்தைகள் — இறைச்சிக் கடைகள்

கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்கள் உட்பட சந்தைகள், இறைச்சிக்கடைகள், கோழிக்கடைகள் ஆகியவற்றை இவ் அட்டவணையில் குறிப்பிடப்படும் காலங்களுக்கு 01 - 01 - 1994 முதல் குத்தகைக்கு கொடுப்பதற்கென அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் என்னால் 24 - 12 - 93 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்படிவங்கள் குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பிணையும் கேள்விப்படிவக் கட்டணம் ரூ. 100/-உம் செலுத்துவதன் பேரில் 23 - 12 - 93 வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணி வரையும் யாழ்ப்பாண மாநகர சபை நாலுவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப்படிவங்கள் ..................................சந்தை / கடைக்கான கேள்வி என எழுதப்பட்ட கடித உறையிலிட்டு அரக்கு முத்திரையிடப்பட்டு யாழ்ப்பாண மாநகரசபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 24 - 12 - 1993-ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக சேர்க்கப்படல் வேண்டும்.

கேள்விகள் சம்பந்தமான மேலதிக விபரங்களை யாழ்ப்பாண மாநகரசபை நாலுவித இறைவரிக் கிளையில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம். தபாலில் அனுப்பப்படுமாயின் அதனால் ஏற்படும் தாமதங்களுக்கு மாநகரசபை பொறுப்பேற்கமாட்டாது.

கேள்விகள் 24 - 12 - 1993 பிற்பகல் 2-30 மணிக்கு திறந்து ஆராயப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமாக இருக்கலாம்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
14 - 12 - 1993.

| குத்தகை விபரம் | குத்தகை காலம் | கேள்விப் பிணை | நிர்ணயிக்கப்பட்ட ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மாத வாடகை |
|---|---|---|---|---|
| ............ | ............ | ............ | ............ | ............ |
| 1. கொட்டடி ஆட்டிறைச்சிக் கடைகள் | | | | |
| கடை இல. 02 | 1 வருடம் | 2500-00 | 6000-00 | 112-50 |
| 2. குருநகர் மாட்டிறைச்சிக் கடைகள் | | | | |
| கடை இல. 01 | 1 வருடம் | 2500-00 | 50000-00 | 195-00 |
| ,, 02 | 1 வருடம் | 2500-00 | 21000-00 | 195-00 |
| ,, 03 | 1 வருடம் | 2500-00 | 34500-00 | 195-00 |
| ,, 04 | 1 வருடம் | 2500-00 | 24000-00 | 195-00 |
| ஆட்டிறைச்சிக் கடை 07 | 1 வருடம் | 2500-00 | 14000-00 | 195-00 |
| 3. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | | | | |
| கடை இல. 01 | 1 வருடம் | 2500-00 | 7000-00 | 200-00 |
| ,, 02 | 1 வருடம் | 2500-00 | 6000-00 | 200-00 |
| ,, 03 | 1 வருடம் | 2500-00 | 5000-00 | 200-00 |
| ,, 07 | 1 வருடம் | 2500-00 | 5000-00 | 200-00 |
| ஆட்டிறைச்சிக் கடை | | | | |
| கடை இல. 08 | 1 வருடம் | 2500-00 | 5000-00 | 200-00 |
| ,, 09 | 1 வருடம் | 2500-00 | 5300-00 | 200-00 |
| கோழிக்கடை | | | | |
| கடை இல. 10 | 1 வருடம் | 2500-00 | 5000-00 | 200-00 |
| 4. பாசையூர் மாட்டிறைச்சிக் கடை | | | | |
| கடை இல. 03 | 1 வருடம் | 2500-00 | 24900-00 | 135-00 |
| அரியாலை மாட்டிறைச்சிக் கடை | 1 வருடம் | 2500-00 | 16000-00 | 135-00 |
| புங்கங்குளம் ஆட்டிறைச்சிக் கடை | 1 வருடம் | 2500-00 | 10000-00 | 200-00 |
| புங்கங்குளம் மாட்டிறைச்சிக் கடை | 1 வருடம் | 2500-00 | 19000-00 | 200-00 |
| **சந்தைகள்** | | | | |
| 1. பெரியகடை மரக்கறிச் சந்தை | 1 வருடம் | 5000-00 | 75000-00 | |
| 2. குருநகர் சந்தை | 1 வருடம் | 5000-00 | 125000-00 | |
| 3. செங்குந்தா சந்தை | 1 வருடம் | 5000-00 | 200000-00 | |
| 4. நாவாந்துறை சந்தை | 1 வருடம் | 2500-00 | 40000-00 | |
| 5. பாசையூர் சந்தை | 1 வருடம் | 2500-00 | 30000-00 | |

(ஏ-3665)

**மணிவாக்கு**

கெட்டவன் புனிதன் போல பாசாங்கு செய்யும் போது மேலும் கெட்டவன் ஆகிறான்.
— ஃபிரான்ஸிஸ் பேக்கன்

## நமது நோக்கு

### எலும்புக் கூடுகள்!

அமெரிக்க-வியட்நாம் யுத்தம் முடிந்து ஆண்டுகள் பலவாகிவிட்டன. முடிந்த கதை எனத்தான் எண்ணிக் கொண்டிருந்தோம். ஆனால் இன்றைய செய்தி என்ன?

காணாமற்போன அமெரிக்க வீரர்கள் பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடாத்த அமெரிக்க அமைச்சர் வியட்நாம் போயிருக்கிறார். அவரிடம் கையளிக்கப்பட்ட எலும்புக் கூடுகள் பூரண இராணுவ மரியாதையுடன் விமான மூலம் எடுத்துச் செல்லப்பட்டதாம்!

பிரசார தந்திரத்தால் போரின் கொடுமைகளை நீண்ட காலத்திற்கு மூடி மறைக்க முடியாது என்பதே இச்சம்பவம் சுட்டிக் காட்டுகிறது.

இங்கு, அரச பிரசார இயந்திரம் இழப்புகளை மூடி மறைத்தும், யுத்த விளைவுகளை, காணமற்போனோர் விபரங்களை வெளியிடாது தடுத்தும் எவ்வளவு நாட்களுக்குத்தான் காலம் கடத்த முடியும்?

அரசாங்கத்திற்கு, யுத்தப் பிரசாரத்திற்குப் பின்னணி இசைத்துக் கொண்டிருந்த தென்னிலங்கைப் பத்திரிகைகள் சில விபரங்களை வெளியிடத் தொடங்கியதும் மக்கள் விழித்துக் கொண்டார்கள்.

போர் வேண்டாமெனச் சில தாய்மார்கள் முழக்கம் எழுப்புவதும், அரசியல் தீர்வுபற்றிப் பேச முற்படுவதும் இந்த விழிப்புணர்ச்சியின் ஒரு அம்சமே!

அந்த வகையில்தான், சிறிமா அம்மையாரும் அஸ்கிரிய பீடாதிபதியும் அரசியல் தீர்வை அரசே முன்வைக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தமிழ் மக்கள்மீது கொண்ட பெருங்கருணைப் பேராற்றில் மூழ்கி நினைத்ததன் விளைவு என எண்ணி எவரும் ஏமாந்து விடமாட்டார்கள்.

தற்போது, 'பூநகரிக்குப்' பிறகு, படையினர் பட்ட வேதனைகளும் அப் பிறகு போரின் கொடுமைகள் அங்கு உணரப்படுகின்றன.

இங்கு, நீண்ட காலமாகவே, மக்கள் குண்டுவீச்சினாலும், தடைகளினாலும் படும் வேதனைகள் பற்றி அவர்கள் உணர்ந்து, வாயினாற்கூட அனுதாபம் தெரிவிக்காத நிலையில், தீர்வுபற்றி அரசுக்கு நெருக்கடி கொடுக்க முன்வந்துள்ளது, ஒரு நல்ல திருப்பமே!

வியட்நாமில் அமெரிக்கா கற்றுக் கொண்ட பாடம், எலும்புக் கூடுகளைத் தற்போதும் பெறும் நிகழ்ச்சி, மத்திய கிழக்கில், சோமாலியாவில், பொஸ்னியாவில், ஹெய்தியில் கைகொடுத்திருக்கிறது.

படிக்கும் பாடம், அரசுக்கு நெருக்கடி கொடுப்பதற்கல்ல, அமைதித் தீர்வுக்காக அமைய வேண்டும்!

# தொடரும் இராணுவ தோல்விகள் அரசியல் தீர்வை தூண்டி வருகிறது

தொடர்ந்து இடம்பெற்றுவரும் இராணுவ தோல்விகள் இனப்பிரச்சினை தீர்வின் அவசியத்தை தென்பகுதியில் உணர்த்தி வருவதனை அவதானிக்க முடிகிறது.

போரெல்லாவற்றிற்கும் பெரும் சமராக அமைந்த ஒப்ரேஷன் தவளை இராணுவ நடவடிக்கையில் மீள முடியாத அளவிற்கு படையினர் தரப்பில் பெரும் இழப்புகளை ஏற்படுத்தியுள்ளதுடன் இவ் இழப்புகள் தென்பகுதியின் மூலை முடுக்கையெல்லாம் ஆட்டம் காணச் செய்துள்ளதுடன் அங்குள்ள அரசியல்வாதிகள் மதவாதிகள் உட்பட பலரைச் சிந்திக்க வைத்திருக்கிறது.

போரை நிறுத்துங்கள் புலிகளும் எமது பிள்ளைகளே என்று தெற்கிலுள்ள பெண்களும், இனப்பிரச்சினை தீர்வுக்கு அரசியல் திட்டம் ஒன்றை முன்வையுங்கள் என்று பலரும் அரசாங்கத்தை வற்புறுத்துகின்ற அளவிற்கு தெற்கில் ஒப்ரேஷன் தவளை பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் இராணுவ தோல்வியை ஏற்றுக்கொண்டு இராணுவ தளபதி சிசில் வைத்தியரத்ன தனது பதவியை ராஜினாமா செய்கின்ற அளவிற்கு நிலைமை ஏற்பட்டுள்ளது. இதேபோன்று தொடர்ந்து வடக்கு கிழக்கு யுத்தம் நடைபெறுமாக இருந்தால் அதனால் ஏற்படும் படையினர் இழப்புகள் அரசின் தோல்விக்கு வழிவகுக்கும் என்றும் அரசியல் அவதானிகள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

அண்மையில் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநராக முன்னாள் யாழ் அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டிருப்பது இனப்பிரச்சினை விடயத்தில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்தும் அறிகுறி என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றபோதும் அரசினுடைய இராணுவ ரீதியான ஏற்பாடுகள் இந்த நம்பிக்கைத் தன்மையைச் சீர்குலைப்பதாகவுள்ளது.

பூநகரித் தோல்விக்கு பழிவாங்கும் நோக்குடன் வடபகுதியில் பெரும் வியூகம் அமைந்த இராணுவ நடவடிக்கையொன்றை நடத்துவதற்கு அரசு முயற்சி செய்து வருகிறது. அத்துடன் கிழக்கு மாகாணத்திலுள்ள இராணுவ முகாம்களை விசேட அதிரடிப் படையினரிடம் ஒப்படைத்துவிட்டு அங்கிருந்த படையினரை வடபகுதி நோக்கி நகர்த்தும் நடவடிக்கையிலும் அரசு தற்போது மும்முரமாக ஈடுபட்டு வருகின்றது.

**துரை**

தினமும் பலாலி படைத்தளத்திற்கு விமானங்கள் மூலம் பெருந்தொகையான படையினர் குவிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் திருமலையிலுள்ள சிறிய முகாம்களும் மூடப்பட்டு வருகின்றன. பூநகரி தோல்வியை அடுத்து மன்னார் மாவட்டத்திலுள்ள கிளாவற்றுறை, கொண்டச்சி இராணுவ முகாம்களை வாபஸ்பெற வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதேபோன்று இராணுவ நடவடிக்கைகள் தொடரத் தொடர படைகள் முகாம்களிலிருந்து வாபஸ்பெறவேண்டிய நிலையும் ஏற்படலாம் என்பதற்கு கடந்தகால நிகழ்வுகள் பாடமாக அமைந்துள்ளன.

இந்நிலையில் எதிர்வரும் பெப்ரவரி மாதமளவில் வடக்கு கிழக்கில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் இதற்கு இந்தியாவின் உதவியைப்பெற அரசாங்கம் தீவிரமாக பரிசீலித்து வருவதாகவும் சிரேஷ்ட அமைச்சர் ஒருவரை மேற்கோள்காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை இலங்கை அரசு புலிகளின் தாக்குதலில் இருந்து தப்பிப்பிழைக்க வேண்டுமானால் வெளிநாடுகளின் உதவியைப் பெறவேண்டும் எனவும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

தெற்கில் இராணுவத்தினருடைய செல்வாக்குக் குறைந்து வருவதுடன் படையினரின் உயர்மட்டத்தில் ஒருமித்த கருத்தும் அணுகுமுறைகளும் இல்லாத நிலை நீடித்து வருகிறது. இதனால் வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்படும் எந்த இராணுவ நடவடிக்கையும் தோல்வியிலே முடிவதுடன் ராணுவ காவலரண்கள் மற்றும் முகாம்கள் புலிகளிடம் வீழ்ச்சியடைந்தே வருகிறது. அத்துடன் போர்முனைகளில் தலைமை வகித்து போரை வழிநடத்தக்கூடிய அனுபவம்மிக்க உயர் அதிகாரிகளுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் தொடர்ந்து போரை நடத்துவது புலிகளின் கையை மேலும் ஓங்கச்செய்யும்.

'ஒப்ரேஷன் தவளை' மூலம் புலிகள் பெருந்தொகையான ஆயுத தளபாடங்களை கைப்பற்றியுள்ளனர். இவ் ஆயுதங்கள் தொடர்ந்து நடைபெறும் போராட்டத்தில் புலிகளின் பலத்தை மேலும் அதிகரிக்க முடியும். வடக்கு-கிழக்குப் பகுதிகளில் யுத்தம் நடைபெற்றாலும் அதனாலேற்படும் இழப்புகள் நாடு தழுவிய ரீதியில் ஏற்பட்டு வருகிறது. அண்மையில் இடம்பெற்ற இராணுவ முகாம் மீதான தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களின் தொகை தென்பகுதியை சோகத்தில் ஆழ்த்தியதாக அங்கு இடம்பெற்ற அஞ்சலி நிகழ்ச்சிகளிலிருந்து அறியக்கூடியதாக இருக்கிறது.

இந்த நிலை தொடருவதாக இருந்தால் தெற்கில் தொடர்ந்து சோக நிலையே ஏற்படும் என்பதனை கவனத்திலெடுத்து அரசு இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என்ற நிலைப்பாட்டை அங்குள்ளவர்கள் மத்தியில் உருவாக்கியிருக்கிறது.

இராணுவத்தில் சேருவதற்கு ஒரு காலத்தில் நீண்ட கியூவில் காலிமுகத்திடலில் காத்து நின்ற சிங்கள இளைஞர்களின் பெற்றோர்கள் பூநகரிச் சண்டையின் பின்னர் படைகளிலுள்ள தமது பிள்ளைகளின் நிலைமை அறிவதற்கு இதே இடத்தில் முற்றுகையிட்டிருந்தார்கள்.

பூநகரியில் இடம்பெற்ற சண்டையில் சிக்கிய தமது பிள்ளைகளின் விபரங்கள் பற்றி அறியமுடியாது தவித்த பெற்றோர்களுக்கு தற்போது படையினரின் சம்பளங்கள் வழங்கப்படவில்லையாம். இதனால் அரசுக்கு எதிராக அவர்கள் போர்க்கொடி உயர்த்தியுள்ளனர்.

இதேபோன்று அரசு சார்பிற்கு தெற்கிலிருந்து பலத்த எதிர்ப்புகளும் அதிகரித்து வருகின்றன. (ஸ)

## இராசிபலன்

16-12-1993

வியாழக்கிழமை

(தமிழுக்கு மார்கழி 01)

திருதியை பி.ப. 109 வரை உத்தராடம் மு.இ. 7-47 வரை இராகுகாலம் பிற்பகல் 1-52 முதல் 3-23 வரை சுப நேரம் காலை 7-52 முதல் 9-22 வரை சித்தயோகம் பொன்னாலைவரதராஜர் கொடி.

மேடம்: காரிய ஜயம், பெரியோர் மதிப்பு, புதிய முயற்சி.

இடபம்: பணநஷ்டம், சத்துரு பீடை. மதிமயக்கம்.

மிதுனம்: கெட்டசகவாசம். தொழில் போராட்டம், மனப்பயம்.

கடகம்: பெண் மூலம், சந்தோஷம், புதிய வருவாய், கல்வியில் சிறப்பு.

சிங்கம்: தனபசி கருணை, கலந்தாலோசித்தல், பாராட்டு.

கன்னி: அஜீரணம், கடன் தொல்லை, தடுமாற்றம்.

துலாம்: அவநம்பிக்கை, தொழில் பாதிப்பு, அலைச்சல்.

விருச்சிகம்: காரியம் கைகூடும் பிறர் சன்மானம், அதிக உழைப்பு.

தனுசு: வீண்சச்சரவு. பிறர் குறைகேட்டல், மனக்கவலை.

மகரம்: மக்கள் சந்தோஷம் நிலைமாற்றம். சகோதர உதவி

கும்பம்: வயோதிபர் தொல்லை, வாய்தர்க்கம், வெறுப்பு.

மீனம்: தானதர்மம், பெண்கள் சல்லாபம், தெய்வீக செலவு.

—ஜோஸ்யர்.

**கண்ணை இமை காக்கும்**
**மண்ணை மரம் காக்கும்**

## பிலிப்பைன்ஸில் முஸ்லிம்களால் 8 கிறிஸ்தவர்கள் சுட்டுக்கொலை

(மணிலா)

பிலிப்பைன்ஸின் முஸ்லிம் தீவிரவாதிகள் எட்டு கிறிஸ்தவர்களை சுட்டுக் கொன்றுள்ளனர். பயணிகள் பஸ் ஒன்றை வழிமறித்த தீவிரவாதிகள் பயணிகளை இறக்கி அவர்களில் முஸ்லிம்களையும் கிறிஸ்தவர்களையும் வெவ்வேறாக நிறுத்திய பின்னர் கிறிஸ்தவர்களை சுட்டுக்கொன்றனராம்.

இதேவேளை பிலிப்பைன்ஸில் மீண்டும் மரணதண்டனையை அமுல்செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

போதைவஸ்து கடத்தல், ஆட்கடத்தல், லஞ்ச ஊழல் போன்ற குற்றச்சாட்டுகளுக்கு இனிமேல் மரணதண்டனை விதிக்கப்படவுள்ளது.

1987ம் ஆண்டுமுதல் பிலிப்பைன்ஸில் மரணதண்டனை நிறுத்தப்பட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

## இன்று

(கொழும்புத்துறை)

பொன்னாலை அருள்மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவில் மார்கழி மாதச் சுவர்க்கவாசல் தரிசனம் கொடியேற்றம் இன்று 16-ம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

24-ம் திகதி வெள்ளி அதிகாலை சுவர்க்கவாசல் தரிசனமும், தேர்த் திருவிழாவும் 25ம் திகதி சனி காலை தீர்த்தமும் மாலை கொடியேற்றமும் நடைபெறும். (154)

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோணந்தோட்டம் பஜனைச் சபையினரின் மார்கழி மாத அதிகாலை பஜனை இன்று காலை ஆரம்பமாகி முப்பது நாட்கள் நடைபெறும்

இப்பஜனைக் கோஷ்டி எஸ். தில்லைநாதன் தலைமையில் வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் ஆரம்பமாகி முக்கியமான வீதி வழியாக நடைபெறும். இந்நிகழ்வுகளை ஒட்டி சைவசமய அறிவுப் போட்டி ஒன்றும் நடாத்தப்பட்டு மூன்று பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

(5-ம் பக்கம் பார்க்க)

## தானிய உற்பத்தி ஊக்குவிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் நெடுங்கேணி வட்டத்திலே காலபோக மழையுடன் தானிய உற்பத்தியினை அதிகரிக்கச் செய்யும் நோக்கில் பல்வேறு ஊக்குவிப்புக்கள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிராமிய உற்பத்திக் குழுக்களுக்கூடாக வழங்கப்பட்டுவருகின்றன.

இதன் முன்னோடி நடவடிக்கையாக நெடுங்கேணி வட்ட கிராமிய உற்பத்திக் குழுக்களூடாக 500 விவசாயிகளுக்கு பொருண்மிய நிறுவனத்தின் உதவியுடன் உற்பத்திக்கான ஊக்குவிப்புக்களாக விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

## வைத்திய நிபுணர் பயணம்

(நெல்லியடி)

சுமார் மூன்று மாத காலம் பிரெஞ்சு வைத்தியக் குழுவில் மந்திகை மருத்துவமனையில் பணிபுரிந்த வைத்திய நிபுணரான டாக்டர் திரு. ஜோன் அமெரிக்காவுக்குப் பயணமானார். (160)

## வத்திக்கான் - இஸ்ரேல் உறவுகள் ஆரம்பம்

(லண்டன்)

வத்திக்கானும் இஸ்ரேல் நாடும் அரசு உறவை ஆரம்பித்து தூதரகங்களை நிறுவ ஒப்புக் கொண்டிருப்பதாக தொலைக்காட்சி செய்தி ஒன்று தெரிவித்துள்ளது.

மேலும் அடுத்த ஏப்ரல் இறுதியில் இது நடைபெறும் என்றும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

1948ம் ஆண்டு இஸ்ரேல் நாடு உருவாக்கப்பட்டபின்னர் வத்திக்கான் இஸ்ரேல் நாட்டை இதுவரை அங்கீகரிக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. -ர

# பொதுமக்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்ற பல கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்

தற்போது அரச துறைசார் சில அரச திணைக்களங்களின் செயற்பாடு மிகவும் மந்த நிலையிலும் இலைப்பு நடைமுறையைப் பற்றிக்கொண்டதாகவே காணப்படுகிறது. இன்றைய சூழ்நிலையில் இங்கே பொதுமக்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்றுவதற்கு பல கஷ்டங்களையும் இன்னல்களையும் எதிர்நோக்குவதாக அபிப்பிராயம் கொண்டுள்ளனர்.

நிர்வாகத்தில் மாற்றம், அதிகாரப் பரவலாக்கல் போன்ற சொற்பிரயோகங்களை கேட்டு பொதுமக்கள் விரக்தியடைந்துள்ளனர் என்றே கூறவேண்டியுள்ளது.

உள்ளூர் ஆட்சி அன்று மாநகரசபை, நகரசபை, பட்டின சபை, கிராம சபை போன்ற அமைப்புகள் இருந்த பொழுது மக்களின் பிரதிநிதிகள் மூலம் நகர, கிராம மட்டத்தில் அப்பகுதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அங்கத்தவர்கள் மூலமே பல கருமங்களை ஆற்ற முடிந்தன. ஆனால் உள்ளூராட்சியில் மாற்றங்கள் ஏற்பட்டபின் இன்று நடப்பவைகள் நாம் அறிந்ததே.

இன்று வரியிறுப்பாளர்கள் சேவைகள் கட்டும்படி அறிவுறுத்தல்கள் இல்லாமலும் வரியிறுப்பாளர்கள் கலந்து ஆலோசிக்கப்படாமலும் நடவடிக்கைகள் இடம்பெறுவதாகப் பரஸ்பரம் சுட்டிக்காட்டப்படுகிறன. குறைபாடுகள் எது எவ்வாறாயினும் வரியிறுப்பாளர்கள் நலன் இன்றைய நிலையில் கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும். என்பதை மக்கள் பிரதிநிதிகள் அற்ற நிலையில் அக்கடமைக்கு பொறுப்பான அரச அதிகாரிகள் கவனத்தில் கொள்வது மிகவும் முக்கியமானதொன்றாகும். அத்துடன் இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் தொடர்புள்ள பொதுமக்களுக்கு சரியான அறிவுறுத்தல்களும் நிறைவான வழிகாட்டல்களும் இன்றைய தேவையாக அமைய வேண்டும்.

உதாரணமாக நேற்று முன்தினம் கூட்டுறவுச் சங்கங்கள் இணைந்து சமூகசேவை அலுவலகம் முன்னர் இடம்பெற்ற சம்பவத்திற்கான முக்கிய காரணங்கள் ஆராயப்பட்டு எதிர்காலத்தில் இவைகள் தவிர்க்கப்படவேண்டும்.

## அவதானி

அரச அதிகாரிகள் பொறுப்பான பதவி வகிப்பவர்கள். அவர்கள் பொறுப்பில்லாது நடந்து கொள்ளமாட்டார்கள் என்ற நம்பிக்கையை உறுதிப்படுத்த வேண்டும். காரணங்கள் கூறி எதற்கும் காலம் தாழ்த்துவது பிரச்சினைக்கு தீர்வாகாது.

இன்று முக்கியமாக பொதுமக்கள் தங்கள் கருமங்களை செய்வதற்கு பிரதேச சபைகள் கல்விக்கோட்டங்கள், ப.நோ.கூ. சங்கங்கள், காழ் செயலகம் கல்வித்திணைக்களம் முதலியவற்றை நாட வேண்டியுள்ளது.

சில திணைக்களங்கள் மக்களின் தேவைகளை பூர்த்திசெய்கின்றன. பல திணைக்களங்கள் நிதி கூறுவதிலேயே நாட்டம் கொண்டுள்ளன. ஒரு சாதாரண கடிதத்தை பெறுவதற்கு கூட ஒருவர் பல முறை செல்லவேண்டியுள்ளது. சம்பந்தப்பட்ட பணியாளர் ஏன் இப்படி செய்கின்றார் என்பதை அவரது மனச்சாட்சிக்கு விட்டு விடுவோம். ஆனால் திணைக்களங்களில் உள்ள மேல் அதிகாரிகள் தமக்களின் கீழ் கடமை செய்யும் பணியாளர்களை மேற்பார்வை செய்தும் பல குறைபாடுகள் இடம்பெறத்தான் செய்கின்றன.

சில அரசப் பணியாளர்கள் கொழும்பிற்கு சென்று இங்கே வராத நிலை ஏற்பட்டு அவர்கள் பணிகள் பாதிக்கப்படுகின்ற செய்தி ஒன்று அண்மையில் வெளியாகியுள்ளது.

அரசு உயர் அதிகாரிகள் சிலர் பொதுமக்களை வரவேற்று உரையாடி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை அணுகுவதுபோல பகுதிமட்ட பணியாளர்கள் செயற்படுவதில்லை என்ற அபிப்பிராயமும் நிலவுவதை அவதானிக்கமுடிகின்றது.

எனவே அரச திணைக்களங்கள் பொதுமக்களுடன் அணுகுவதில் நிறைய மாற்றங்கள் தேவைப்படுகின்றன. "இன்று போய் நாளை வா" என்ற நடைமுறை மாறவேண்டும்.

---

## பண்ணிசை பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

தலையாழி ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தில் அனைவருக்குமான தமிழ்ப் பண்ணிசைப் பயிற்சிநெறி நாளை தொடக்கம் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறவுள்ளது. யாழ். பல்கலைக்கழக பண்ணிசை தலைவர் திரு. த. வி. மூ நவரத்தினம் இப்பயிற்சிநெறியை நெறிப்படுத்துவார். -ரி

## மாணவருக்கு முழுமையான கல்வியை அளிக்கவேண்டும்

(உடுவில்)

"அடுத்தாண்டு முதல் வடபகுதியிலுள்ள பாடசாலைகள் பலவற்றில் நிலவும் சிக்கல்கள், சீர்கேடுகளியாவும் நிவர்த்தி செய்யப்படுவதற்கு கல்வித் திணைக்கள அதிகாரிகள், கோட்டக் கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்களுடன் இணைந்துசெயற்பட்டுவருகிறார்கள். பாடசாலை சீராக்கத்தில் ஆசிரியர்களும் பெரும் பங்கு கொள்ள வேண்டும்."

திரு இ. சிவானந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது;

போர்க்காலம், குடிபெயர்வு, இடம்பெயர்வு ஆகிய காரணங்களைக் காட்டி பாடசாலை நாட்களில் வீணான காலத்தைப் போக்கக்கூடாது. அடுத்த ஆண்டு நாம் மாணவர்களுக்கு முழுமையான கல்வியை அளிக்க வேண்டும். 109)

## ஒரேதினத்தில் 850 பேர் சிகிச்சை பெற்றனர்

(நெல்லியடி)

சுமார் 850 க்கு மேற்பட்ட வெளிநோயாளிகள் அந்த தினம் மந்திகை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர்.

முக்கிய மருந்துகளுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடுகளே வெளிநோயாளர் பெருந்தொகையாக வருவதற்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது.

இந்நோயாளிகளில் 95 வீதமானோர் காய்ச்சல் வினைபாதிக்கப்பட்டவர்கள்என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. 160)

## திருநாள்

(அரியாலை)

சகல புத்தேவிகள் கிறிஸ்தவ ஆலயங்களில் புனித கன்னிமரியாளின் அமலோற்பவத் திருநாள் கடந்த 8ந் திகதி புதன்கிழமை கொண்டாடப்பட்டது.

யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் ஞாயிற்றுக்கிழமையைப் போல மூன்று திருப்பலிகள் நிறைவேற்றப்பட்டன. (59)

யாழ்ப்பாணம் வடக்குப் பிரிவு கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது;

மருதனார்மடம் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர்

## நத்தார் இசை ஆராதனை

(அரியாலை)

யாழ் இராசாவின் தோட்டம் அம்பிளி கோட் ஆலயத்தில் தினமும் நத்தார் இசை ஆராதனைகள் நடைபெற்றுவருகின்றன. -59

## கிராமிய மேம்பாட்டு திட்ட நடைமுறை

(யாழ்ப்பாணம்)

உற்பத்தியை அதிகரிக்கச் செய்து வறுமையை ஒழிப்பதை நோக்கமாகக்கொண்டு ஒவ்வொரு கிராமங்கள் தோறும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களை தெரிவு செய்து கிராம மேம்பாட்டுத் திட்டத்தினூடாக கால்நடைகளும், சிறு கைத்தொழில் முயற்சிகளையும் மேற்கொள்வதற்கு பணமும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக் குழுக்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

இளவாலைப்பகுதியில் அல்வாய் மேற்கு, மத்தியில் 18 குடும்பங்களுக்கு சிறு கைத்தொழில் மேற்கொள்வதற்கென ஒரு குடும்பத்திற்கு சுமார் 1250 ரூபா வீதமும், புத்தூர் கிழக்கில் 20 குடும்பங்களுக்கு உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடன் ஒரு குடும்பத்திற்கு சுமார் 2500 ரூபா வீதமும் இருபாலை கிழக்கில் 15 குடும்பங்களுக்கு மண்பாண்ட உற்பத்திக்கென சுமார் 3500 ரூபா வீதமும், நல்லெண்ணெய் உற்பத்தியை மேற்கொள்வதற்கென பிரான்பற்றில் 10 குடும்பங்களுக்கு குடும்பமொன்றிற்கு 5000 ரூபா வீதமும் வழங்கப்பட்டுள்ளது.

இதனைவிட கொடிகாமத்தில் 15 குடும்பங்களுக்கு நல்லின ஆடுகள் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## அறிமுக அட்டை வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் வாரத்தினை முன்னிட்டு மக்களுக்கு அடையாள அட்டை, கிராமிய மேம்பாட்டுத் திட்ட பயனாளிகள் அறிமுக அட்டை ஆகியவை வழங்கும் வைபவம் அண்மையில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

தென்மராட்சி கோட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவீரர் அன்ரனியின் தந்தையார் மங்கள விளக்கேற்றி வைத்தார்.

முதல் அட்டையினை மாவீரர் மாயவனின் தந்தையார் வழங்க அதன் பின்னர் கிராம சேவையாளர்கள் அறிமுக அட்டைகளை வழங்கினார்கள்.

## விசேட பிரார்த்தனை

(கொழும்புத்துறை)

தொல்புரம் கொட்டடியப்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்பாள் கோவிலில் அமைதி, சமாதானம், சுபீட்சம் நிலவ இறையாசிவேண்டி கடந்த 8ம்திகதிதொடக்கம்10 தினங்கள் வரைவிசேட அபிஷேகம்பூசை ஆராதனை வழிபாட்டுடன் இடம்பெற்று வருகிறது. -154

## விளையாட்டுப் போட்டி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஐக்கியவிளையாட்டுக் கழகத்தின் 33வது ஆண்டு விளையாட்டுப்போட்டியும் பரிசளிப்பு விழாவும் கழகத் தலைவர் திரு. ஆர். இராசநாதன் தலைமையில் நடைபெற்றது. யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ துறைத் தலைவர் திரு. மு. நடராஜசுந்தரம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார். -52

## வெளிக்குளம் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு மாதிரியாக வடமராட்சி கிழக்கு குடத்தனை மேற்கில் அமைந்துள்ள வெளிக்குளத்தினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின்கிராமிய உற்பத்திக்குழு மக்களுடனும் இணைந்து போரும் நிறுவனத்தின் உதவியுடன் புனரமைப்பு செய்துள்ளது. இக்குளம் நீண்ட காலம் தூர்ந்து போய் திருத்தப்படாமல் இருந்ததும்குறிப்பிடத்தக்கது.

## மரக்கன்று விநியோகம்

(யாழ்ப்பாணம்)

1993 மாவீரர் எழுச்சி வாரத்தில் செல்வபுரம் கிராமத்திலுள்ள 250 குடும்பங்களுக்கும் மாவீரர் நினைவாக ஒவ்வொரு தென்னம்பிள்ளையும், அத்தியன்றும், தேசிக்காய் கன்றும் வழங்கப்பட்டது மாவீரர் குடும்பங்களுக்கு வழங்கும் வைபவத்துடன் ஆரம்பித்து பிந்து ஏனைய குடும்பங்களுக்கும் இக்கன்றுகள் வழங்கப்பட்டன.

## சித்தியை பழிவாங்க தந்தை உட்பட மூவரை கொலைசெய்த மாணவன்

(கல்கத்தா)

இந்தியாவின் கல்கத்தாவில் உயர்தர வகுப்பு மாணவன் ஒருவன் தன் சக மாணவர் ஒருவருடன் சேர்ந்து தனது தந்தையையும் மாற்றாந் தாயையும் அவரது மனையும் கொலை செய்துள்ளார்.

மாற்றாந் தாய், தன்னையும் தன் அண்ணனையும் நடத்திய கொடுமைக்கு பழிவாங்கவே இப்படி கொலை செய்ததாக கொலைசெய்த மாணவன் பொலிசாரிடம் கூறியுள்ளான்.

இறந்தவர்கள் மூவரும் கம்பியால் கத்தி மற்றும் கூரிய பிளேடுகளால் வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மற்றொரு மாணவன், அண்மையில் அமெரிக்கபடம் ஒன்றை ரி.வி.யில் பார்த்து அதே பாணியில் இந்த கொலையையும் செய்ததாக பொலிஸாருக்கு கூறியுள்ளனர். (கே-ரி)

## வைத்தியசாலை குறைகள் அரச அதிபருக்கு மகஜர்

(மன்னார்)

மன்னார் வைத்தியசாலை குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி அங்குள்ள மக்கள் பெருந்திரளாகச் சென்று மன்னார் அரச அதிபரிடம் மகஜர்களை சமர்ப்பித்துள்ளனர்.

தலைமன்னாரில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. மருத்துவமனையில் போதிய மருந்து வசதிகள் இல்லையெனவும் அசமந்தப் போக்கே அங்கே நிலவுவதாகவும் மகஜர்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## வைத்தியசேவை விஸ்தரிப்பு

(கொழும்புத்துறை)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினர் யாழ்ப்பாண மாவட்டத்தில் தமது நடமாடும் வைத்திய சேவையினை விரிவுபடுத்தி வருகின்றனர்.

இந்நடமாடும் வைத்திய சேவைப் பிரிவினர் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பல்வேறு அகதி முகாம்களுக்கும் நேரில் சென்று வைத்திய சேவையை மக்களுக்கு அளித்து வருகின்றனர். -154

## தமிழீழ நீதிமன்றில்..

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட நீதிமன்ற விசாரணை, நீதியாளர்கள் மயூரன், சுடர் இசையமுதன் முன்னிலையில் கடந்த 7ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமானது.

சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்ததாக எதிர் மீது குற்றம் சாட்டப்பட்டு கோப்பாய் தமிழீழ காவல் துறையினரால் தொடரப்பட்ட வழக்கில் எதிர் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து நீதியாளர்கள் சட்டக்கோவை பிரிவு 32க்கு அமைவாக 45,000 ரூபா குற்றப் பணமாகச் செலுத்துமாறும், குற்றப்பணம் செலுத்தத் தவறும் பட்சத்தில் 20 மாதங்கள் கட்டாய சமூக சேவையில் ஈடுபட வேண்டுமென்றும் தீர்ப்பளித்தனர்.

இதே தினம் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்தாரென கோப்பாய் காவல்துறையினரால் தொடரப்பட்ட மற்றொரு வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது எதிர் குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

நீதியாளர்கள் தமிழீழ சட்டக்கோவை பிரிவு 32க்கு அமைவாக எதிர்க்கு 50,000 ரூபா குற்றப்பணமாகச் செலுத்துமாறும் குற்றப்பணம் செலுத்தத் தவறும் பட்சத்தில் 28 மாதங்கள் கட்டாய சமூகசேவையில் ஈடுபட வேண்டுமென்றும் தீர்ப்பளித்தனர். -162

## கசிப்பு வழக்கில் எதிரிக்கு 50,000 ரூபா அபராதம்

(நெல்லியடி)

சட்டவிரோதமான வகையில் 12 போத்தல் கசிப்பை கொண்டு சென்றவருக்கு பருத்தித்துறை தமிழீழ நீதிமன்றில், ரூபா 50,000 அபராதமாக விதிக்கப்பட்டது.

கசிப்பு கொண்டு சென்றவர் மீது குற்றம் சுமத்தி பருத்தித்துறை காவல்துறையினர் சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர்செய்தனர்.

நீதியாளர்களான ஒப்பிலான், ஜனகன், ஜேகதாஸ் ஆகியோர் ராசீ அறிவிப்பிட்ட அபராதத் தொகையை செலுத்தும்படி உத்தரவிடப்பட்டது. 160

### நிதி கொடுப்பனவுகளை

## பிரதி தபால் அதிபருக்கு அனுப்பவேண்டும்

(பண்டத்தரிப்பு)

வடமாகாணத்திலுள்ள அரச நிறுவனங்கள் தபால் திணைக்களத்திற்கான நிதி கொடுப்பனவுகளை புதிய நிதி அதிகார பரவலாக்கல் திட்டத்தின் பிரகாரம் இனிமேல் கொழும்பிலுள்ள தலைமைத் தபால் அதிபதியின் அலுவலகத்திற்கு அனுப்பாது யாழ்ப்பாணத்தில் செயற்படும் வடமாகாண பிரதி தபால் அதிபதிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

இது தொடர்பான சுற்று நிருபம் ஒன்று அண்மையில் வடமாகாண பிரதி தபால் அதிபதியினால் வட பகுதியிலுள்ள சகல அரச திணைக்களங்களின் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் தபால் திணைக்கள நிதிக் கொடுப்பனவுகள் யாவும் கடந்த அக்டோபர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் கொழும்புக்கு பதிலாக யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் வடமாகாண பிரதி தபால் அதிபதியின் பொறுப்பில் விடப்பட்டுள்ளதாக இதுபற்றி தெரிவிக்கப்படுகின்றது. -72

### யாழ் குடாவில்

## வெள்ள நிவாரணம் ரூபா 15 லட்சம் ஒதுக்கீடு

(கொழும்பு)

யாழ். குடாநாட்டில் தொடர்ச்சியாக பெய்த கடும் மழையையடுத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவியாக சுமார் 15 லட்ச ரூபாவை வழங்குவதற்கு சமூகசேவைகள் திணைக்களம் முன்வந்துள்ளது.

கொழும்பில் தற்போது தங்கியிருக்கும் யாழ். அரச அதிபர் கே. மாணிக்கவாசகர் சமூக சேவைகள் திணைக்கள தலைவருடன் நேற்று முன்தினம் நடாத்திய விரிவான பேச்சுவார்த்தையையடுத்தே மேற்படி நிதி உதவியை வழங்க சமூக சேவை திணைக்களம் முன்வந்துள்ளதாம்.

யாழ். குடாவில் சுமார் 18 ஆயிரம் குடும்பங்கள் கடும் மழையினால் பாதிக்கப்பட்டிருப்பதும் மேற்படி பேச்சுவார்த்தையின் போது சுட்டிக்காட்டப்பட்டதாம். (உ)

### ரூபா 62,000 கோடி

## சேமலாப நிதியில் சேர்ந்துள்ளது

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதியில் தற்போது 62 ஆயிரம் கோடி ரூபாவுக்கு மேல் சேர்ந்துள்ளதாக தொழில் தொழில் அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

அவ்வமைச்சு மேலும் தெரிவிக்கையில்: மாதம் ஒன்றுக்கு 56 கோடி ரூபாவுக்கு மேல் இந்நிதியில் சேர்க்கப்படுவதாகவும் 50 லட்சம் பேர் இவ்வமைப்பில் அங்கம் வகிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் மட்டும் 550 வேலை கொள்வோர் புதிதாகப் பதிவு செய்துள்ளதாகவும் 5440 பேர் தமது பணத்தை மீளப்பெற விண்ணப்பித்துள்ளதாகவும் 4449 பேருக்கு அவர்களுக்கு வழங்கப்படவேண்டிய பணம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -உ

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

ஏழாலை லெனின் சனசமூக நிலையத்தின் அறவழி மழலைகள் கல்விப்பூங்காவின் ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 18-ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

## லட்சார்ச்சனை

(கொழும்புத்துறை)

கல்லைக் அருள்மிகு ஸ்ரீவேதவனப் பிள்ளையார் கோவிலில் பிள்ளையார் பெருங்கதையை முன்னிட்டு விசேட அபிஷேகம், பூசை ஆராதனையும், பின் சிவாச்சாரியார் பிரம்மஸ்ரீ பெ. சோமசுந்தரக்குருக்கள் தலைமையில் இலட்சார்ச்சனை பூசை தினமும் இடம்பெறுகின்றன. (154)

### இன்று

(3ம் பக்கத் தொடர்ச்சி)

0 0

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை உடுக்கியவளை சுகாகணபதிப் பிள்ளையார் கோயிலில் இன்று 16-ம் திகதி நடைபெறவுள்ள சதுர்த்தித் திருவிழாவின்போது பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் சிவ. மகாலிங்கம் ''வாசகமும் வாதவூரரும்'' என்னும் பொருள்பட சமயப்பேருரை நிகழ்த்துவார்.

## வீதிகள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

புதுக்குடியிருப்பு வட்டத்தில் இரணைப்பாலை, கோம்பாவில், புதுக்குடியிருப்புமேற்கு, புதுக்குடியிருப்பு கிழக்கு கிராமங்களில் உள்ள வீதிகளை புனரமைக்கும் வேலைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அப்பகுதி கிராமிய உற்பத்திக் குழுக்கள் மக்களுடன் இணைந்து செய்து முடித்துள்ளன.

நீண்ட காலமாக திருத்தி அமைக்கப்படாது குண்டும் குழியுமாக இருந்த இந்த வீதிகள் செப்பனிடப்பட்டு புதுப் பொலிவுடன் விளங்குகின்றன.

## குரக்கன் கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

குரக்கன் பயிர்ச் செய்கையாளரது உற்பத்தியினை சந்தைப்படுத்துவதன் ஊடாக குரக்கன் செய்கையை மேலும் ஊக்குவிக்கும் நோக்குடன் அவர்களிடமிருந்து குரக்கனை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளில் இம்முறையும் யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது.

குரக்கன் செய்கையாளரிடமிருந்து வட்டாரீதியாக இதுவரை 13340 கிலோ குரக்கன் கிராமிய உற்பத்திக் குழுக்கள் மூலமாக கொள்வனவு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் புனித யாகப்பர் ஆலய புனர் நிர்மாண நிதிக்காக குருநகர் பாடுமீன் கழகம், விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று போட்டியிடும் கழகங்களின் விபரம் வருமாறு:

இன்றைய முதலாட்டத்தில் பாடுமீன் கழகமும் சென் ஹென்றிஸ் கழகமும் மோதுகின்றன. 2வது ஆட்டத்தில் ஞானமுருகன் கழகமும் ஸ்தந்தரா கழகமும் மோதுகின்றன.

இப்போட்டிகள் அனைத்தும் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். -வி

## விவசாயிகள் வயதெல்லை

(கொழும்புத்துறை)

கமத்தொழில் காப்புறுதிச் சபையின் விவசாயிகள் ஒய்வூதியத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும் விவசாயிகளின் வயதெல்லை குறைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டகாலத்தில் 18 வயதிலிருந்து 59 வரையான விவசாயிகள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

## ஒய்வூதியக் குறைப்பு

ஆனால் எதிர்வரும் டிசம்பர் மாதம் 31ம் திகதிக்குப் பின்னர் 50 வயதிற்கு மேற்பட்டோர் இணைத்துக் கொள்ளப்படமாட்டார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு கமத்தொழில் காப்புறுதிச்சபையின் தலைமைப்பகுதியிலிருந்து யாழ் மாவட்ட அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட சுற்று நிருப இலக்கம் 272ல் இதுபற்றி விபரமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (154)

## பயண பணம் மீளளிக்கப் படாது

(மானிப்பாய்)

சோமார், மாலோ கப்பல்களில் பயணம் செய்வதற்கு பணம் செலுத்தியவர்களுக்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்தும் அவர்கள் பயணம் செய்யாவிடின் அவர்களது பணம் மீளளிக்கப்படமாட்டாதென்று யாழ் மேலதிக அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். -71

### செப்ரிசிமியாவால்

## சிசு மரணம்

(தெல்லியடி)

செப்ரி சிமியா நோயினால் பாதிக்கப்பட்ட 22 நாட்களேயுடைய பெண் சிசு ஒன்று மந்திகை மருத்துவ மனையில் கடந்தவாரம் மரணமாகியது.

துன்னாலை தெற்கு கரவெட்டியைச் சேர்ந்த ஐயாத்துரை என்பவரது பெண் சிசுவே இவ்விதம் மரணமாகியுள்ளது. -160

## கோழிகளுக்குப் புதுவித நோய்

(கொழும்புத்துறை)

தொல்புரம், மூளாய், சுழிபுரம் பகுதிகளில் கோழிகளுக்கு கண்ணில் ஒருவித கட்டி வளர்ந்து இருகண்களும் தெரியாது போய் விடுகிறது.

கண் இரண்டும் கட்டி வளர்ந்து மூன்று, நான்கு நாட்களில் குஞ்சுகள் இறந்து விடுகின்றன. (154)

## கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

வலி. தென் மேற்கு பிரதேச சனசமூக நிலையங்களின் சமாஜம் இப்பகுதியில் இயங்கிவரும் சனசமூக நிலையங்களுக்கு அபிவிருத்தித் திட்டத்திற்கான நிதியிலிருந்து பெற்றோமாக்ஸ் விளக்கு, பிளாஸ்டிக் வாளி மற்றும் விளையாட்டு உபகரணங்களை வழங்குமாறு வலி தென் மேற்கு பிரதேச சபையின் விசேட ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. -72

## குடும்பத்திற்கு 25 கோழிகள்

(யாழ்ப்பாணம்)

ஒவ்வொரு கிராமங்கள் தோறும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைத் தெரிவு செய்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துமுகமாக கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தின் ஊடாக பல்வேறு உதவிகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வழங்கி வருகின்றது.

இதன் அடிப்படையில் சரணவாய் கிழக்கிலும், சரணவாய் தெற்கிலும் வறுமைக் கோட்டின்கீழ் வாழும் 10 குடும்பங்களுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக் குழுவினரால் ஒரு குடும்பத்திற்கு 25 கோழிகளும் மற்றும் தீவனம், உபகரணம் என்பனவும் வழங்கப்படவுள்ளன.

### ஆட்பதிவு

## திணைக்களம் இடமாற்றம்

(மானிப்பாய்)

யாழ். செயலக மேல்மாடியில் இயங்கி வந்த ஆட்பதிவுத் திணைக்களம் தற்போது செயலகத்தில் முன்னைய மோட்டார் போக்குவரத்து திணைக்களம் இருந்த இடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (71)

## புனித பிரான்சீஸ் சவேரியார் திருவிழா

(அரியாலை)

யாழ் திருநெல்வேலி புனித பிரான்சீஸ் சவேரியார் ஆலய வருடாந்த திருவிழா அண்மையில் நடைபெற்றது.

நற்கருணைமறை உரையை அருட்திரு லூயிஸ் பொன்னையா அடிகள் ஆற்றினார். திருநாள் திருப்பலியை கோப்பாய் பங்குத்தந்தை நிறைவேற்றி வைத்தார். (59)

### இரு பாலஸ்தீனியர்

## சுட்டுக் கொலை

(லண்டன்)

இஸ்ரேலியர் ஆக்கிரமித்துள்ள பாலஸ்தீன காஸா நகரில் இரு பாலஸ்தீனியர்களை இஸ்ரேலிய இராணுவம் சுட்டுக் கொன்றுள்ளது.

இஸ்ரேலிய இராணுவத்தின் நடவடிக்கையில் குறைந்தது இருபது பாலஸ்தீனியர்கள் படுகாயமடைந்தனர். (ரி)

## நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளுக்கு 1994ஆம் ஆண்டில் அனுமதி கோரி விண்ணப்பித்தோருக்கான நேர்முகப் பரீட்சை யாழ்ப்பாணம் தெற்கு வலய கல்விப் பணிமனையில் 18ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## செய்திச் சிதறல்

### வாழைப்பழம் விலை வீழ்ச்சி

(கொழும்புத்துறை)

யாழ் குடாவில் சந்தைகளில் கடைகளில் தற்போது ஒரு கிலோ வாழைப்பழம் 8 ரூபா தொடக்கம் பத்து ரூபா வரை விற்பனையாகி வருகிறது

கடைகள், சந்தைகளில் குலைகுலையாக வாழைப்பழக்குலைகள் தேங்கி இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. (154)

### நுளம்பு தொல்லை அதிகரிப்பு

(கொழும்புத்துறை)

தென்மராட்சிப் பகுதியில் நுளம்பின் தொல்லைகள் அதிகரித்துள்ளது.

இப்பகுதியில் நுளம்பின் தொல்லையால் சிலர் மலேரியா நோயால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (154)

